பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

10 09 2026 THURSDAY   6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டில் 5 பெரிய ரயில்வே திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியிருப்பது தென்னிந்தியாவில் சிறந்த ரயில் போக்குவரத்து சேவைக்கு வழிவகுக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமை செயலகம் கட்டும் திட்டத்தை மாநில அரசு கைவிட வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் வலியுறுத்தியுள்ளார்.

3. பழங்குடியின மக்களின் உழைப்பு சுரண்டலை தடுத்து நிறுத்துவதற்கு தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

4. தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், சென்னை, திருவள்ளூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று லேசானது

முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. அமெரிக்க ஓபன் ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் ரேவதி – யுக்ரைனின் Antonia Sushkova இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--இனி விரிவான செய்திகள்--

-----------

நாட்டில் 10 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலான மதிப்பில் 5 பெரிய ரயில்வே திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியிருப்பது தென்னிந்தியாவில் சிறந்த ரயில் போக்குவரத்து சேவைக்கு வழிவகுக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இதனால் லட்சக்கணக்கான மக்கள் பயனடைவார்கள் என்று கூறியுள்ளார்.

அமைச்சரவையின் முடிவால், பயணிகள் போக்குவரத்தை விரைவுபடுத்துவதையும், வலுவான போக்குவரத்தையும், கூடுதலாக சரக்குகளை கையாளுவதையும் உறுதி செய்வதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

-----------

சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமை செயலகம் கட்டும் திட்டத்தை மாநில அரசு கைவிட வேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், நெரிசல் மிகுந்த பட்டினப்பாக்கத்தில், தலைமை செயலகம் கட்டப்பட்டால், போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு சார்ந்த பல்வேறு பிரச்சனைகள் உருவாக வாய்ப்பிருப்பதாக கூறியுள்ளார்.

அத்துடன் கடற்கரையை ஒட்டிய பகுதி என்பதால், பெரிய கட்டிடம் கட்டப்படும்போது ஏற்படும் சுற்றுச்சூழல் பிரச்சனையையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், அப்பகுதி மீனவ சமூகத்தினரின் வாழ்விடத்தையும், வாழ்வாதாரத்தையும் ஒட்டுமொத்தமாக சீர்குலைத்துவிடும் என்று கூறியுள்ளார்.

இதுபோன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படும்போது, அவசரகதியில் செயல்படாமல் பல்வேறு தரப்பினருடன் ஆலோசனை
மேற்கொண்டு ஆய்வுக்கு பிறகு அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே, சென்னை பட்டினப்பாக்கத்தில் தலைமை செயலகம் அமைக்கும் திட்டத்தை கைவிட்டு மாற்று இடத்தை தேர்வு செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் திரு. விஜய்யை தான் வலியுறுத்துவதாக டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

-----------

இருளர் உள்ளிட்ட பழங்குடியின மக்களின் உழைப்பு சுரண்டலையும், கடன் கொத்தடிமைத்தனத்தையும் தடுத்து நிறுத்துவதற்கு தமிழக அரசு உடனடியாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக்குழு வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து, அக்கட்சியின் மாநிலச் செயலாளர் திரு.பெ.சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், காஞ்சிபுரம் மாவட்டம், சிங்காடிவாக்கம் ஊராட்சி பகுதியில், வாங்கிய கடனை உடனடியாக செலுத்த வேண்டும் என்று கூறி, நிறைமாத கர்ப்பிணியை மருத்துவமனைக்கு செல்ல அனுமதிக்காததால், அந்த கர்ப்பிணியும் பிறந்த பச்சிளம் குழந்தையும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக சுட்டிக்காட்டியுள்ளார்.

பழங்குடியின மக்களின் வறுமையையும், கல்வி அறிவின்மையையும் பயன்படுத்தி, அவர்களை கடன் மற்றும் உழைப்பு சுரண்டலுக்குள் தள்ளும் நடைமுறைக்கு இந்தக் கொடூர சம்பவம் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது என்று கூறியுள்ளார்.

இதையடுத்து, கர்ப்பிணியை மருத்துவமனைக்கு செல்ல விடாமல் தடுத்த வியாபாரி உள்ளிட்டோர் மீது வழக்கு பதிவு செய்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநில அரசை திரு.பெ.சண்முகம் வலியுறுத்தியுள்ளார்.

-----------

விநாயகர் சதுர்த்தியையொட்டி பயணிகளின் நெரிசலை தவிர்க்கும் வகையில், 2 சிறப்பு ரயில்களை தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

அதன்படி, சென்னை சென்ட்ரலில் இருந்து போத்தனூருக்கு நாளை இரவு மணி 11.50-க்கு சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

மற்றொரு ரயில் தாம்பரத்திலிருந்து தென்காசிக்கு நாளை இரவு மணி 7.30-க்கு இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே கூறியுள்ளது.

இதற்கான முன்பதிவு இன்று காலை 8 மணிக்கு தொடங்குவதாக தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

-----------

திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு முகத்துவாரம் பகுதியில் தூர்வாருவது குறித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள தொழில்நுட்ப குழு அமைக்கப்படும் என்று மாநில வனத்துறை அமைச்சர் திரு. ரஞ்சித் குமார் கூறியுள்ளார்.

பழவேற்காட்டில், பறவைகள் சரணாலயம், வனத்துறை அலுவலகம், பழவேற்காடு ஏரி உள்ளிட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டப்பின் அவர் இதனை தெரிவித்தார்.

-----------

தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், சென்னை, திருவள்ளூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் மாலை, இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அம்மையம் கூறியுள்ளது.

மாநிலத்தின் உள் மாவட்டங்களில், அதிகப்பட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் 2 முதல் 4 டிகிரி செல்ஸியஸ் இயல்பைவிட அதிகமாக இருக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

-----------

பெரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள நேபாளத்திற்கு 35 டன் நிவாரணம் மற்றும் மீட்பு பொருட்களுடன் சென்ற விமானப்படையின் 8-வது விமானம் காத்மாண்டு சென்றடைந்தது.

-----------

சாதாரண பாஸ்போர்ட்களை வைத்திருக்கும் இந்தியச் சுற்றுலா பயணிகளுக்கு விசா தேவையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு தாய்லாந்தில் 30 நாட்கள் தங்குவதற்கு அனுமதி அளிக்கப்படுவதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

-----------

இந்தியாவுக்கான ஆஸ்திரேலிய தூதர் திரு. Philip Green தலைமையிலான குழுவினர், ஹரியானா முதலமைச்சர் திரு. நயாப் சிங் சயினியுடன் பல்வேறு துறைகளின் ஒத்துழைப்பு குறித்து விவாதித்தனர்.

-----------

ஒடிசாவில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஐக்கிய அரபு எமிரேட்சில் பயணம் மேற்கொண்டு வரும், அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் சரண் மாஜி நேற்று அபுதாபியில் அந்நாட்டு வர்த்தக குழுக்களுடன் விவாதித்தார்.

-----------

சென்னையில் உள்ள இந்திய தரநிர்ணய அமைவனத்தின் பரிசோதனை நடைமுறைகள் குறித்து, மத்திய இணையமைச்சர் திரு. பி. எல். வர்மா அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

-----------

கலைப் பண்பாட்டுத்துறை சார்பில், சென்னையில் நடத்தப்பட்ட இளம் கலைஞர்களுக்கான மாநில கலைப்போட்டிகளில் வெற்றிப்பெற்றவர்களுக்கு அமைச்சர் திரு.ராஜ்மோகன் பரிசு வழங்கினார்.

-----------

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, அத்தொகுதியின் முக்கிய சாலைகளில் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

-----------

திருவள்ளூர் மாவட்டத்தில் நீர்நிலைகளில் குப்பை கழிவுகளை கொட்டினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சியர் திருமதி.கவிதா எச்சரித்துள்ளார்.

-----------

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அருகே பருத்திப்புத்தூரில் டெங்கு காய்ச்சலை பரப்பக்கூடிய லார்வா புழுக்கள் இருந்த பொருட்களை சுகாதாரத்துறையினர் பறிமுதல் செய்தனர்.

-----------

மதுரை திருப்பறங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் உண்டியல் காணிக்கையாக 93 லட்சத்து 23 ஆயிரம் ரூபாய் கிடைத்துள்ளதாக இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

-----------

ஐடிஐ படித்தவர்களுக்கான மாவட்ட அளவிலான தேசிய தொழில் பழகுநர் பயிற்சி இம்மாதம் 23 ஆம் தேதி வடசென்னை அரசினர் தொழில்பயிற்சி நிலைய வளாகத்தில் நடைபெற உள்ளதாக ஆட்சியர் திருமதி. மாலதி ஹெலன் தெரிவித்துள்ளார்.

-----------

அமெரிக்க ஓபன் ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் ரேவதி – யுக்ரைனின் Antonia Sushkova இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை 2-6, 6-2, 10-7 என்ற செட் கணக்கில் செக் குடியரசின் Kovackova – Zajickova இணையை வென்றது.

-----------

ஆசிய கேடட் மற்றும் ஜூனியர் கராத்தே சாம்பியன் போட்டியில் இந்தியா 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது. ஜோர்டானின் அம்மானில் நடைபெற்று வரும் போட்டியில் மகளிர் கேடட் பிரிவில் ஆனந்தி கார்க்கும், ஜூனியர் பிரிவில் சத்திய தேஜாவும் வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.

-----------

வியட்நாம் ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் கிரண் ஜார்ஜ், ஹெச்எஸ் பிரணாய், தருண் மணப்பள்ளி ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், கிரண் ஜார்ஜ், தாய்லாந்தின் Wongsup-யும் ஹெச்எஸ் பிரணாய், மலேசியாவின் Jing Hong Kok-யையும் வென்றனர்.

இரண்டாவது சுற்றில் தருண் மணப்பள்ளி தைவானின் Yu Kai Wang-யை வென்றார்.

-----------

ஆசியக் கோப்பை மகளிர் டுவென்டி டுவென்டி கிரிக்கெட் போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

துபாயில் நடைபெற உள்ள இப்போட்டி, இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

-----------

ஆசியக் கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியின் மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில், இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது. சீனாவில் இப்போட்டி நடைபெற உள்ளது.

<<<<< >>>>>